PW10

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 91/2018

அரசு தரப்பு சாட்சி 10 (LW 12) நாள் 07.04.2025

பெயர் வேலு கிராமம்

தந்தை பெயர் மத்தீஸ்வரர் தொழில் துணைக்காவல் கண்காணிப்பாளர் ஓய்வு

வயது 63/2025 தாலுக்கா

(1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜரில்லை. )

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் கரூர் மாவட்ட குற்றப்பிரிவு காவல் துணைக்காணிப்பாளராக பணிபுரிந்து 30.04.2020 அன்று ஓய்வு பெற்றேன். தற்போது திருநெல்வேலியில்வசித்து வருகிறேன். கடந்த 2010ம் ஆண்டு மணல்மேடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் திரு. ராஜகோபால் என்பவர் பதிவு செய்த மணல் மேடு காவல் நிலைய குற்ற எண். 176/2010, ச/பி. 447, 506(ii) இதச மற்றும் 3(1) of TNPPDL Act ன் படி 07.06.2010 அன்று 21.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன்விசாரணை மேற்கொண்டு என் பார்வைக்கு வைத்தார். அந்த வழக்கை நான் 09.06.2010 அன்று தொடர்புலன்விசாரணைக்கு எடுத்து கொண்டேன். சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டேன். இவ்வழக்கின் வாதி ஹபீப்ஜான் என்பவரை விசாரணை செய்து தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் சாட்சிகள் அப்துல்அலி, வெங்கடேசன், நாகராஜ், கலியமூர்த்தி, முருகேசன், செல்வராஜ், ராதாரவிச்சந்திரன், பாஸ்கரன், தென்னரசு ஆகியோரை விசாரித்தேன். அவர்கள் உதவி ஆய்வாளரிடம் கூறியது போல் என்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்பு இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை தேடியதில் தொடர்ந்து தலைமறைவாக இருந்து நீதிமன்ற முன்ஜாமின் பெற்றுள்ளதாக தெரியவந்தது. எனது புலன் விசாரணை முடித்து மேற்படி எதிரிகள் மீது 01.09.2010 அன்று 1ம் எதிரி மீது 447, 506(ii) மற்றும் 3(1) of TNPPDL Act ன் படியும் 2ம் எதிரியின் மீது 447மற்றும் 3(1) of TNPPDL Act ன்படி காவல் இறுதியறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றம் அனுப்பினேன்.

எதிரிகள் தரப்பில் 1வது எதிரியே குறுக்கு விசாரணை செய்கிறார்

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி காவல் நிலையத்தில் இருந்து 2009ம் வருடம் மார்ச் மாதம் பணி மாறுதலாகி மணல்மேடு காவல்நிலையத்திற்கு காவல் ஆய்வாளராக அறிக்கை செய்தேன். எனக்கு முன்பு காவல் ஆய்வாளர் செந்தில் குமார் மணல்மேடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தார். நான் பணியில் சேர்ந்த போது SSI முகுந்தன், உதவி ஆய்வாளர் ராஜகோபால் ஆகியோர் பணியில் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். புகார்தாரர் ஹபீப் ஜான் புகாரை யாரிடம் எந்த தேதியில் கொடுத்தார் என்றால் வழக்குக்கோப்பின்படி 11.05.2010 அன்று புகார்மனுவை உதவி ஆய்வாளரிடம் கொடுத்துள்ளார். எந்த உதவி ஆய்வாளரிடம் என்றால் பெயர் நினைவில்லை. மேற்படி மனுவை விசாரித்து உதவி ஆய்வாளர் அரசு வழக்கறிஞரின் ஒப்புதல் பெற்று வழக்கு பதிவு செய்துள்ளார். காவல் ஆய்வாளர் செந்தில் குமார் புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு சொத்து சம்பந்தமாக சிவில் வழக்கு நிலுவையில் இருந்ததால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் பிரச்சனையை நீதிமன்றம் மூலம் தீர்த்து கொள்ளுமாறு பேசி அனுப்பிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் மணல்மேடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பொறுப்பேற்ற பிறகு ஏன் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அரசு வழக்கறிஞரின் சட்டக்கருத்துரை பெற்று வழக்கு பதிவு செய்யப்பட்டதாக உதவி ஆய்வாளர் ராஜகோபால் கூறினார். சட்டக்கருத்துரை கொடுத்த அரசு வழக்கறிஞரின் பெயர் என்ன என்றால் திரு. பாலகிருஷ்ணன்,

Government pleader, மயிலாடுதுறை. அந்த சட்டக்கருத்துரை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சட்டக்கருத்துரை காவல்நிலைய வழக்கு கோப்பில் உள்ளது. 10.05.2010 அன்று புகார்தாரர் கொடுத்த மனு மீது 25 நாட்கள் கால தாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய காரணம் என்ன என்றால் முதல் தகவல் அறிக்கை, சட்டக்கருத்துரை பெற்று காவல் உதவிஆய்வாளர் ராஜகோபால் என்பவரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. வேறு தனிப்பட்ட காரணங்கள் எதுவும் இல்லை. நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் நீண்ட நாட்களாக புகார்தாரரருக்கும் எதிரிகளுக்கும் சிவில் வழக்கு நிலுவையில் இருப்பதாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றாலும், அதைப்பற்றி நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் நான் விசாரித்தபோது அதுபோல் சொல்லவில்லை. உதவி ஆய்வாளர் ராஜகோபால் தனக்கு, புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் இடையே இருந்த சிவில் பிரச்சனை பற்றி தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றாலும், அதைப்பற்றி நான் என்ன சொல்கிறேன் என்றால் எனக்கும் அவர்களுக்குள் இருந்த சிவில் பிரச்சனை பற்றி தெரியாது. எதிரிகளுக்கும் புகார்தாரருக்கும் உள்ள சிவில் பிரச்சனை பற்றி தெரியாமல் எதிரிகள் மீது பொய்யான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 25 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததற்கான காரணம் காவல் இறுதியறிக்கையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த புகார் மனு கொடுத்தபோது காவல் ஆய்வாளர் செந்தில்குமார் மணல் மேடு காவல்

ஆய்வாளராக இருந்தாரா என்றால் இல்லை. உதவி ஆய்வாளர் ராஜகோபால் நீதிமன்ற விசாரணையின்போது சட்டக்கருத்துரை பெற்றது பற்றி தனக்கு தெரியாது என்றும், அதுபற்றி காவல் ஆய்வாளர் செந்தில்குமாருக்குத்தான் தெரியும் என்று சொல்லியுள்ளார் என்றால் காவல் ஆய்வாளர் செந்தில் குமார் அப்போது காவல் ஆய்வாளராக மணல்மேடு காவல்நிலையத்தில் பணிபுரியவில்லை. 07.06.2010 அன்று பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் 1, 2, எதிரிகள் மற்றும் 5 நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அந்த மற்ற 5 நபர்கள் யார் என்று காவல் இறுதியறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் மற்ற 5 நபர்கள் இந்த குற்ற செய்கையில் ஈடுபடவில்லை என்று விசாரணையில் தெரியவந்தது. இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டது 2 எதிரிகள் மட்டுமே என்று புலன் விசாரணையில் தெரியவந்தது. மற்ற 5 நபர்கள் யார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் அசா 1 எனது விசாரணையில் இரண்டு எதிரிகள் மட்டுமே வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லியுள்ளார். அதனால் அவர்களை பற்றி விசாரிக்கவில்லை. இந்த நீதிமன்றத்தில் வழக்கு சொத்துக்கள் என்ன தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் உதவி ஆய்வாளர் ராஜகோபால் வழக்கு சொத்துக்களை கைப்பற்றி மகசர் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். நான் காவல் ஆய்வாளர் என்ற முறையில் அவை என்னென்ன வழக்கு சொத்துக்கள் என்று அவரிடம் கேட்டேனா என்றால் கேட்டு தெரிந்து கொண்டேன். என்ன பொருட்கள் கைப்பற்றியதாக சொன்னார் என்றால் 1. சுமார் 30 செமீ நீளமும் 15 செமீ அகலமும் கொண்ட சிமெண்ட் சிலாப் இரண்டு, 2. உடைந்த சிமெண்ட் சிலாப் துண்டுகள் கொஞ்சம், 3. காம்பவுண்ட் சுவரிலிருந்து உடைக்கப்பட்ட கம்பிகள் கொஞ்சம் ஆகியவற்றை கைப்பற்றியுள்ளதாக சொன்னார்.

புகார்தாரர் தன்னை ஹாஜிமுகமது கடப்பாரையால் குத்த ஓடிவந்ததாகவும் அவருடைய மகன் பாசில் அரிவாளல் வெட்டுவதற்கு ஓங்கியதாகவும் புகாரில் சொல்லியுள்ளார் என்றாலும், மேற்படி ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதா என்றால் சம்பவ இடத்தில் இருந்த வழக்கு சொத்துக்கள் காவல் உதவி ஆய்வாளர் ராஜகோபால் முதல் புலன்விசாரணை அதிகாரி கைப்பற்றி நீதிமன்றத்தில் வழக்கு சொத்தாக மகசர் மூலம் ஒப்படைத்துள்ளார். எதிரிகள் கைது செய்யப்படவில்லை எனவே அவர்கள் சம்பவத்தில் பயன்படுத்திய ஆயுதங்கள் கைப்பற்றபடவாய்ப்பில்லை. சம்பவம் நடந்து 26 நாட்கள் கழித்து சிமெண்ட் சிலாப் இரண்டு, உடைந்த சிமெண்ட் சிலாப் துண்டுகள் கொஞ்சம், காம்பவுண்ட் சுவரிலிருந்து உடைக்கப்பட்ட கம்பிகள் ஆகியவற்றை கைப்பற்றிய போது கீற்று, மூங்கில் கழிகள், கைப்பற்றப்படவில்லையா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் இருந்த வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எத்தனை சாட்சிகள் சாட்சி பட்டியலில் காட்டப்பட்டுள்ளார்கள் என்றால் 12 சாட்சிகள். சாட்சிகள் அனைவரையும் ஒரே நாளில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவும், சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்ய ஒரே நாளில் முடியுமா என்றால் முடியும். 07.06.2010 அன்று எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு எதிரிகள் கைது செய்யப்பட்டார்களா என்றால் இல்லை. ஏனென்றால் சம்பந்தப்பட்ட எதிரிகள் தொடர்ந்து தலைமறைவாக இருந்ததால் கைது செய்ய இயலவில்லை. 07.06.2010 அன்று பதிவு செய்த முதல்தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு எப்போது அனுப்பப்பட்டது என்றால் அதே தினம்

அனுப்பப்பட்டுள்ளது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 14.06.2010 அன்று தான் நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அன்றே அனுப்பப்பட்டதாக உதவி ஆய்வாளர் சொன்னார். 14.06.2010 அன்று தான் நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பியதற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு என்ன காரணம் என்றால் முதல் தகவல் அறிக்கை காவல் உதவி ஆய்வாளர் ராஜகோபால் என்பவரால் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. தனிப்பட்ட காரணம் எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தால் 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றத்திற்கு அனுப்பவேண்டும் என்பது தெரியுமா என்றால் தெரியும். முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது குறித்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் இல்லை. காலதாமதமாக முதல்தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட காரணம் குறித்து உதவி ஆய்வாளரிடம் தான் கேட்க வேண்டும். இந்த வழக்கில் உதவி ஆய்வாளர் ராஜகோபால் தனது புலன்விசாரணைக்கு பிறகு வழக்கு கோப்பை 09.06.2010 அன்று தொடர் புலன்விசாரணைக்காக என்னிடம் ஒப்படைத்தார். ராஜகோபால் தனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையா என்றால் அது பற்றி என்னால் கருத்து சொல்லமுடியாது. உதவி ஆய்வாளர் ராஜகோபால் முதல் தகவல் அறிக்கையில் அரசு வழக்கறிஞர் கருத்துரை பெற்று வழக்கு பதிவு செய்ததாக சொல்லியுள்ளவிவரங்கள் உண்மையா என்றால் உண்மை.

உதவி ஆய்வாளர் ராஜகோபால் தனது புலன் விசாரணையில் பதிவு செய்த வாக்குமூலங்கள் மேற்கொண்ட புலன் விசாரணை சரியாக இருந்ததா என்றால் சரியாக இருந்தது. புகார்தாரர் ஹபீப்ஜான் 10.05.2010 அன்று சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளார் என்றாலும், ஆனால் மறுநாள் 11.05.2010 அன்று புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும், இடையில் ஏற்பட்ட 19 மணிநேர கால தாமதம் குறித்து புகார்தாரரை விசாரித்து இது சம்பந்தமாக காவல் இறுதியறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. புகார்தாரர் 19 மணி நேர கால தாமதமாக புகார் கொடுத்தது குறித்தும், முதல் தகவல் அறிக்கை 26 நாட்கள் கால தாமதமாக பதிவு செய்தது குறித்து உதவி ஆய்வாளர் ராஜகோபாலுவிற்கும் புகார்தாரருக்கும் இடையே உள்ள கமுக்க கூட்டணி குறித்து நான் விசாரித்து காவல் இறுதியறிக்கையில் இது குறித்து குறிப்பிட்டுள்ளேனா என்றால் அது போல் எந்த கமுக்க கூட்டணியும் அவர்களுக்குள் இருப்பதாக எனது விசாரணையில் தெரியவரவில்லை. புகார் கொடுத்ததலிருந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்வரை என்னென்ன நடடிவக்கைகள் எடுக்கவேண்டுமென்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 07.06.2010 அன்று பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 14.06.2010 அன்று நீதிமன்றத்தில் ஒரு வார கால தாமதமாக அனுப்பப்பட்டதற்கு நான் தான் காரணம் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் தான் அந்த கால தாமதத்திற்கு காரணம். அதற்கு நான் பொறுப்பு என்றால் சரியல்ல. நான் வழக்கின் உண்மை தன்மையை கண்டுபிடிக்காமல் புகார்தாரர் மற்றும் உதவி ஆய்வாளருடன் சேர்ந்து கொண்டு சரியாக புலன்விசாரணை செய்யாமல் காவல் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரர் மற்றும்

சாட்சிகளை தனித்தனியே விசாரித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் தயாரித்த ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்களை அப்படியே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள காவல் இறுதியறிக்கையில் எதிரியின் வயது ஏன் குறிப்பிடவில்லை என்றால் எதிரிகளை கைது செய்யாதாதல் அவர்களின் வயது குறிப்பிடப்படவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தபோது 2ம் எதிரியின் வயது என்ன என்றால் தெரியாது. நான் மணல் மேடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது உதவிஆய்வாளர் ராஜகோபால் பணிபுரிந்தாரா என்றால் பணிபுரிந்தார். 08.06.2010 அன்று 1ம் எதிரியையும் அவரது மனைவியையும் மணல்மேடு காவல் நிலைய லாக்கப்பில் வைத்துக்கொண்டு தகாத வார்த்தைகளால் திட்டி 18 வருடமாக புகார்தாரரை ஏமாற்றி வருகிறீர்கள் என்றும் நாணாக இருந்தால் உங்களை வெட்டி போட்டிருப்பேன் என்றும், உங்களை லாக்கப்பில் வைத்து சொத்தை எழுதி வாங்கப்போகிறேன் என்று சொன்னேனா என்றால் இல்லை. லாக்கப்பில் அவர்களை அடைத்து வைக்கவும்இல்லை. அவ்வாறு சொல்லவும் இல்லை. அவர்களுக்கு 18 வருடகாலமாக வழக்கு நடந்து வருவது எனக்கு தெரியாது. 08.06.2010 அன்று காலை 5.00 மணிக்கு நானும், SSI முகுந்தனும், உதவி ஆய்வாளர் ராஜகோபாலும் காரில் 1, 2 எதிரிகளின் வீட்டிற்கு வந்து 1ம் எதிரி மற்றும் அவரது மனைவியையும் காரில் அழைத்து போனோமா என்றால் இல்லை. அதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை. அவ்வாறு அழைத்து சென்று 1ம் எதிரி தனது வழக்கறிஞரிடம் போனில் பேசவேண்டுமென்று சொன்னபோது இங்கு நான் வைப்பது தான் சட்டம் அப்படியெல்லாம் பேச

முடியாது என்று சொல்லி 1ம் எதிரியை கன்னத்தில் அறைந்தேன் என்றால் சரியல்ல. அதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை. 1ம் எதிரியின் மனைவி இது சிவில் வழக்கு என்று என்னிடம் கதறினார் என்றாலும், அவரையும் லாக்கப்பில் அடைத்தேன் என்றால் சரியல்ல. இது சிவில் வழக்கு என்று ஏற்கனவே இருந்த காவல் ஆய்வாளர் செந்தில்குமார் சொல்லியிருக்கிறார் என்று சொல்லியும் நான் பொருட்படுத்தவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் ஹபீப்ஜான் ஒரு சமாதான உடன்படிக்கை பத்திரம் எடுத்து வந்தார் என்றாலும் அதில் 1ம் எதிரியையும் அவரது மனைவியையும் கையெழுத்துபோடசொல்லி மிரட்டினேன் என்றாலும் அப்படி போடாவிட்டால் கஞ்சா வழக்கு போடுவேன் என்று மிரட்டினேன் என்றால் சரியல்ல. அதனால் அவர்கள் பயந்து போய் அந்த பத்திரத்தில் கையெழுத்துபோட்டார்கள் என்றாலும் அந்த பத்திரத்தை புகார்தாரரரிடம் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. சட்டத்தை காக்கவேண்டிய நானே அப்படி செய்துள்ளேன் என்றாலும் அது கிரிமினல் குற்றம் என்றால் நான் அப்படி செய்யவில்லை. அப்படி செய்தால் தான் கிரிமினல் குற்றம். 08.06.2010 இரவு முழுவதும் 1ம் எதிரி மற்றும் அவரது மனைவியை மணல் மேடு காவல் நிலையத்தில் வைத்திருந்து மறுநாள் தான் அவர்களை வெளியே விட்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி 1ம் எதிரியையும் அவரது குடும்பத்தையும் ஊரை விட்டே துரத்திவிட்டோம் என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகள் தலைமறைவாகிவிட்டார்கள். 1, 2எதிரிகள் புகார் தாரரிடம் இரண்டு லட்சத்து இருபத்தைந்தாயிரம் பெற்றுக்கொண்டதாகவும் வீட்டை புகார்தாரரிடம் ஒப்படைப்பதாக எழுதப்பட்டுள்ளது என்றால் அந்த பத்திரம் பற்றி எனக்கு தெரியாது. புகார்தாரர் ஹபீப்ஜான் காவல் துறையினர்

முன்னிலையில் தான் வீட்டை காலி செய்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. புகார்தாரருக்கும் 1ம் எதிரிக்கும் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கை பற்றி என்னிடம் புகார்தாரர் சொல்லவில்லை. அசா 5 ராதாரவிச்சந்திரன் தனது சாட்சிய த்தில் 08.06.2010 அன்று 1ம் எதிரியையும் அவரது மனைவியையும் காவல் நிலையத்திற்கு அழைத்துபோனதாவும் சமாதான உடன்படிக்கை மிரட்டி எழுதிவாங்கவில்லை என்றும் ஊர் மக்கள் அங்கிருந்ததாகவும், சாட்சியமளித்துள்ளார் என்றாலும், அதைப்பற்றி நான் என்ன சொல்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசா 5 சம்பவம் நடந்த மறுநாள் சம்பவ இடத்திலிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் என்னுடைய விசாரணையில் அப்படி சொல்லவில்லை. அசா 5 தனது சாட்சியத்தில் 08.06.2010 அன்று 1 ம் எதிரி மற்றும் அவரது மனைவியை காவல் நிலையத்திற்கு போலிசார் அழைத்து போனதாக சாட்சியமளித்துள்ளார் என்றாலும், நான் 1, 2 எதிரிகள் தலைமறைவு குற்றவாளிகள் என்று முன்னுக்கு பின் முரணாக காவல் இறுதியறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அசா 8 தனது சாட்சியத்தில் நீண்ட காலமாக 1ம் எதிரிக்கும் புகார்தாரருக்கும் சிவில் வழக்கு நடந்ததாக சொல்லியுள்ளார் என்றாலும், என் விசாரணையில் அப்படி சொல்லவில்லை. 09.06.2010 அன்று மாலை 5.00 மணிக்கு 1ம் எதிரி என்னிடம் புகார்மனு கொடுத்தார் என்றாலும் அதை நான் வாங்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அன்றையதினமே நாகப்பட்டிணம் SPக்கும், தஞ்சாவூர் DIGக்கும் தந்தி கொடுத்துள்ளார் என்றால் அதுபோல் தந்தி கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது. மேலதிகாரியிடமிருந்து அந்த தந்தி சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க சொல்லி எனக்கு தபால் வந்ததா

என்றால் வந்திருக்கும் அதற்கு சரியான பதில்எழுதி அனுப்பியிருப்போம். அந்த தந்தி சம்பந்தமாக விசாரணை மேற்கொண்டேனா என்றால் ஏற்கனவே வழக்கு நிலுவையில் இருந்ததால் விசாரிக்கவில்லை. காவல் ஆய்வாளர் மணல்மேடு, திருச்சி DIG, சென்னை DGPக்கும், காவல் துறை துணைத்தலைவர் தஞ்சாவூர், நாகப்பட்டிணம் SP, மனித உரிமை கழகம், சென்னை ஆகியோருக்கு 1ம் எதிரி புகார் மனு அனுப்பியுள்ளார் என்றாலும் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க சொல்லி எனக்கு தபால் வந்ததா என்றால் வந்தது. அதற்குரிய பதில் அனுப்பப்பட்டுள்ளது. நானும் புகார்தாரரும் மற்றும் 17 பேர் சேர்ந்து 10.06.2010 அன்று மாலை 5.00 மணிக்கு 1ம் எதிரியின் வீட்டை இடித்து விட்டோம் என்றாலும், இது சம்பந்தமாக புகார் கொடுத்து நான் வாங்க மறுத்துவிட்டேன் என்றாலும், சரியல்ல. அதனால் 1ம் எதிரி 11.06.2010 அன்று நாகப்பட்டிணம் SPக்கும், DIG தஞ்சாவூர் ஆகியோருக்கு தந்தி கொடுத்துள்ளார் என்றால் என்ன தந்தி கொடுத்தாலும், கரண்ட்பேப்பர் போட்டு எங்களுக்கு அனுப்புவார்கள். 15.06.2010 அன்று மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டிணம், நாகப்பட்டிணம் SP, துணைக்காவல் கண்காணிப்பாளர் மயிலாடுதுறை ஆகியோருக்கு புகார்மனு 1ம் எதிரி அனுப்பியுள்ளார் என்றாலும் அவை எனக்கு வந்ததா என்றால் வந்திருக்கும் எல்லாவற்றிற்கும் உரிய பதில் எழுதி அனுப்பப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக 1ம் எதிரியை கூப்பிட்டு விசாரித்தேனா என்றால் 1ம் எதிரி தலைமறைவாக இருந்ததால் விசாரிக்க முடியவில்லை. அவரை கைது செய்யமுடியவில்லை. வருவாய் துறை அதிகாரிகள் கிராமத்தில் வந்து விசாரித்தது தெரியுமா என்றால் தெரியாது. தனிமனித சொத்துக்களையோ, பொது சொத்துக்களையோ சேதப்படுத்தினால் 3(1) of TNPPDL Act ன் கீழ் காவல் இறுதியறிக்கை தாக்கல் செய்யமுடியும். 1ம் எதிரி கொடுத்த

புகார்மனுவின் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சம்பவம் சம்பந்தமாக ஏற்கனவே வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வந்தது. 1ம் எதிரி உயர் நீதிமன்றத்தில் என் மீது நடவடிக்கை எடுக்கசொல்லி போட்ட மனு Crlo.P No. 14982/2010, 06.08.2013 அன்று பிறப்பித்த உத்தரவில் என் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவாகியுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 2011 ல் பணி மாறுதலாகி சென்றுவிட்டேன். இது சம்பந்தமாக மேல் அதிகாரிகள் என்னிடம் கேட்டார்களா என்றால் இதுவரை விசாரிக்கவில்லை. 1ம் எதிரி மேல் அதிகாரிகளிம் கொடுத்த புகாரின்பேரில் எனக்கு வந்த கடிதத்திற்கு என்ன பதில் அனுப்பினேன் என்றால் நினைவில்லை. உரிய பதிலை அனுப்பியிருப்பேன். இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அதன்பிறகு 12.07.2014 அன்று மயிலாடுதுறை JM – 1 நீதிமன்றத்தில் கு.ப.ம. எண். 5420/2017 என்ற மனுத்தாக்கல் செய்து என்மீதும் 17 நபர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க மனு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதில் நான் 16 ம் எதிரியாக காட்டப்பட்டுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதில் நீதிமன்றம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. 1992 முதல் இன்று வரை 1ம் எதிரிக்கும் புகார்தாரருக்கும் சிவில் வழக்கு நிலுவையில் இருப்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விவரம் ஆய்வாளர் செந்தில்குமாருக்கு தெரிந்ததால் தான் அவர் குற்ற வழக்கு பதிவு செய்யவில்லை என்றாலும், நான் அதனை சரியாக விசாரிக்காமல் குற்ற அறிக்கை தாக்கல் செய்ததால் நான் தான் குற்றவாளி என்றால் சரியல்ல.

நான் சரிவர புலன்விசாரணை செய்யாமல் காவல் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் நான் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையில் கண்டுள்ள குற்றங்கள் எதையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும் ராஜகோபாலும் புகார்தாரருக்கு ஆதரவாக செயல்பட்டு 1ம் எதிரியின் குடும்பம் நாசமாக காரணமாக இருந்துள்ளோம் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை